# சிந்தையில் ஆயிரம்

-ஜெயகாந்தன் கட்டுரைகள்-

நுழைவாயில்

டாக்டர் கே. எஸ். சுப்பிரமணியன்

# நுழைவாயில்

## டாக்டர். கே.எஸ். சுப்பிரமணியன்

### அறிமுகம்

'சிந்தையில் ஆயிரம்.' ஓர் அழகான சொற்றொடர். 'ஆயிரம்' என்பது இந்தியக் கலாச்சார மண்ணிலிருந்து கிளர்ந்தெழுந்த ஒரு சொல். 'விராட் புருஷனை' விவரிக்கும் பாங்கில் அமைந்துள்ள வேத ஸ்லோகம், ''ஸஹஸ்ர சீரிஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ர பாத்'' என்று குறிக்கிறது. அதாவது ''இம்மாமனிதன் ஆயிரம் சிரமுடையான். கண்களோ ஆயிரம், ஆயிரம் பாதங்கள்'' என்கிறது. 'ஸஹஸ்ரம்' அல்லது 'ஆயிரம்' என்ற சொல் ஓர் எண்ணிக்கையை அன்று, 'எண்ணற்ற' (*infinite*) என்ற கருதுகோளைச் சுட்டுகிறது என்று பொருள் கொண்டால், ஆயிரம் தலைகளுக்கும், ஆயிரம் கண்களுக்குமிடையே இயைபின்மை இல்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதே போல் 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி' என்ற பாரதியின் கூற்று ஏதோ ஒரு *census* கணக்கின் அடிப்படையிலான ஓர் எண்ணிக்கைப் பதிவு அல்ல; எண்ணற்ற ஜாதிகளின் இருப்பு என்பதையே குறிக்கிறது.

'சிந்தையில் ஆயிரம்' — இது ஆயிரம் சிந்தனைகளின் தொகுப்பு அல்ல. ஒரு சிந்தையிலிருந்து — ஜெயகாந்தன் என்ற ஒரு படைப்பாளியின், சிந்தனையாளனின், நுண்ணுணர்வுள்ள (*sensitive*) மனிதனின், பரிவுள்ள பார்வையாளனின் சிந்தையிலிருந்து — சரம்சரமாகச் சொரியும் எண்ணங்களின், அனுபவத் தெறிப்புகளின், உணர்வலைகளின் படையல்.

இது ஒரு கட்டுரைத் தொகுப்பு நூல். சீரிய வடிவமைப்பில் இரண்டு தொகுதிகளாகக் களத்தில் பிரவேசிக்கிறது. ஏறத்தாழ 500 கட்டுரைகள்; 1600 பக்கங்கள். 1972 முதல் 2001 வரையிலான மூன்று பத்தாண்டுக் காலப்பரப்பை உள்ளடக்கியது. 13 தனித்தனித் தொகுதிகளாக ஏற்கனவே வந்த கட்டுரைகளின் கால

ஜெயகாந்தனின்

# சிந்தையில் ஆயிரம் கட்டுரைகள்

(இரண்டு தொகுதிகள் கொண்ட முழுத் தொகுப்பு)

இரண்டு தொகுதிகளும் சேர்ந்து

**விலை ரூ. 800-00**

வெளியீடு

**ஸ்ரீ செண்பகா பதிப்பகம்**

ப.எண். 24, கிருஷ்ணா தெரு,

பாண்டிபஜார், தியாகராயநகர்

சென்னை - 600 017. ☎ : 24331510